©
தமிழ்நாடு அரசு
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 42] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 18, 2017
ஐப்பசி 1, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை**

**அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண் 84, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 22 ஜூன் 2017.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் (உணவு மற்றும் பொது விநியோகத் துறை), ஆணை புது தில்லி, 28–4–2017.**

**S.O. 1346 (E).**—1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவு மற்றும் 1966 ஆம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாடு) ஆணையின் பகுதி 5 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு, **28–10–2016** ஆம் நாளிட்ட மத்திய அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II—பிரிவு 3- உட்பிரிவு (ii) இல் வெளியிடப்பட்டுள்ள இந்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் உணவு மற்றும் பொது விநியோகத்துறையின் **28–10–2016** ஆம் நாளிட்ட S.O. 3348 (E) ஆம் எண்ணிட்ட அறிவிக்கையில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறது.

மேற்சொன்ன அறிவிக்கையின் பகுதி 2–இல் உள்ள “2017 எப்ரல் 28 ஆம் நாள்” என்ற எண்கள், எழுத்துக்கள் மற்றும் சொற்களுக்குப் பதிலாக, “2017 அக்டோபர் 28” என்ற எண்கள், எழுத்துக்கள் மற்றும் சொற்கள் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

[கோப்பு எண் 1(6)/2016-SP-I]

**ஜி.எஸ். சாஹூ,**
*இயக்குநர் (சர்க்கரை) கொள்கை.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை நிலை எண் 87, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (D1)த் துறை, நாள் 30, ஜுன் 2017.]*

**நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது வினியோகத் துறை அமைச்சகம்**
**(நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம்) ஆணை புது தில்லி, 17 ஜூன் 2017.**

**S.O.1600(E).**— 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் (10/1955) 3 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, மத்திய அரசு 2016ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் மீதான உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையில் மேற்கொண்டும் திருத்தம் செய்து பின்வரும் ஆணையை மத்திய அரசு இதனால் பிறப்பிக்கிறது. அதாவது:—

1. (1) இந்த ஆணை 2017ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் குறித்த உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணை (இரண்டாவது திருத்தம்) என்று அழைக்கப்படும்.

   (2) இந்த ஆணை அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2. 2016 ஆம் ஆண்டு குறிப்பிட்ட சில உணவுப் பொருட்கள் குறித்த உரிமம் பெறும் தேவைகள், இருப்பு வரையறைகள் மற்றும் எடுத்துச் செல்வதற்கான கட்டுப்பாடுகள் நீக்கல் ஆணையின் 3 ஆம் பகுதியை சேர்ந்த (2) உட்பகுதியில் உள்ள இனம் (i) விட்டுவிடப்பட வேண்டும்.

[F. No. S-10/4/2016-ECR&E]

**பி.வி. ராமசாஸ்திரி,**
*இணைச் செயலாளர்.*

(ஆளுநரின் ஆணைப்படி மீண்டும் வெளியிடப்படுகிறது)

**பிரதீப் யாதவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.